**செ.வெ. எண்: 445** **நாள்: 13.07.2011**

**<u>உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை</u>**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

ரம்$ான் மாதம் நோன்பு கடைப்பிடிப்பவர்களுக்கு கஞ்சி தயாரிப்பதற்காக நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 150 கிராம் வீதம் <u>மொத்த அனுமதி பெற்ற பள்ளிவாசல்களுக்கு</u> வழங்க, அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவ்வாறு ரம்$ான் மாதம் நோன்பு கடைபிடிப்பவர்களுக்கு அனுமதி பெற்ற பள்ளிவாசல்களில் கஞ்சி தயாரிப்பதற்கு தேவையான அரிசிக்கு உரிய மொத்த அனுமதியை புதுப்பித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாக பள்ளிவாசல்களுக்கு வழங்குவார்கள். ரம்சான் மாத நோன்பு கஞ்சி தயாரிப்பதற்காக 3801 டன்கள் அரிசியை தமிழ் நாட்டிலுள்ள அனைத்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்குகளிலும் 29.7.2011 அன்றே தயார் நிலையில் வைத்திருக்கவும் , தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளர்கள். எனவே தமிழகத்தில் அனுமதி பெற்று ஏற்கனவே இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வரும் பள்ளி வாசல்கள் மொத்த அனுமதியை புதுப்பித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்கிலிருந்து அரிசியை பெற்றும் பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை.**